**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி - 2019**

---

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் அந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுமைக்குட்பட்ட தரப்பினரதும் பொறுப்பு**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் அனைத்து நிறுவனங்களாலும், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக்குட்படுத்தப்படும் எந்தவொரு நிறுவனத்தினதும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்படக்கூடிய வகையிலான காலப்பகுதியினுள் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுகின்றமையை சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

அவ்வாறான போதிலும், 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ 12ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019ஆம் ஆண்டிற்கான கட்டுப்பாட்டுச் சபையின் விடயங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25ஆந் திகதிய 01/2015ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2ஆம் பந்தி | கம்பனியின் நிரந்தர பதவியணியினுள் உள்ளடங்கியுள்ள **MM 1-1** சம்பள சம்பள படிமுறைக்குரிய இரு உத்தியோகத்தர்களுக்கு எவ்வித உரித்தும் இல்லாத போது, ரூபா 1,910,000 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும், தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,729,679 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும், எரிபொருள் படிகளும், **MM 1-1** சம்பள தொகுதியிலுள்ள தோட்ட அதிகாரியொருவருக்கு ரூபா 1,260,000 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. | போக்குவரத்து தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான போதியளவான வாகன வசதிகள் கம்பனியிடம் காணப்படாத காரணத்தால், நிதி முகாமையாளர் மற்றும் தோட்ட உத்தியோகத்தர் / சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஆகிய இரு உத்தியோகத்தர்களுக்கு இந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளன. வாகனமொன்றினை கொள்வனவு செய்து பராமரிப்பதை பார்க்கிலும் பொருளாதார ரீதியில் நன்மைபயக்கும் என்பதால் பணிப்பாளர் சபையினால் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்களிடையே தோட்ட அதிகாரிக்கு அவரின் நியமனத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனமொன்றை பயன்படுத்துவதற்கான உரித்து காணப்படுகின்றது. அவ்வாறே சேவைத் தேவைப்பாட்டிற்கமைய வாகனமொன்று தேவைப்படும் உத்தியோகத்தர்களுக்காக அந்த உரித்தினை உள்ளடக்கிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள சட்ட உத்தியோகத்தர் மற்றும் மனிதவள முகாமையாளர் ஆகியோருக்கு இந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதுடன், அது அவர்களின் சேவை உடன்படிக்கைகளில் (நியமனக் கடிதம்) உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த உத்தியோகத்தர்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அலுவலகத்திற்கு வெளியே மேற்கொள்ளும் கடமைகளுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிராததுடன், அவர்களின தனிப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அது தொடர்பில் கருத்திற்கொண்டு, முகாமைத்துவத்தினால் இந்த படிகளை செலுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே சேவைத் தேவைப்பாட்டிற்காக வாகனமொன்று தேவைப்படும் உத்தியோகத்தர்களுக்கு அந்த உரித்தினை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தியமைப்பதற்னு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2003 யூன் 02ஆந் திகதிய 12ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 9.4ஆம் பந்தி | மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சரவை அங்கீகாரமின்றி, 2017ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் கம்பனியின் விற்பனை மேம்படுத்தல் மற்றும் விற்பனை முகாமையாளராக நியமிக்கப்பட்டு போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் கட்டணங்களாக ரூபா 360,000 செலுத்தப்பட்டிருந்தது. | அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியோருக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரின் கோரிக்கைக்கமைய மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திக் கம்பனியால் அதன் உத்தியோகத்தர் ஒருவர் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். பின்னர் அந்த உத்தியோகத்தர் கம்பனியின் சந்தைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவருக்கான சம்பளங்கள் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவரால் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு வழங்கிய சேவைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், மாதாந்தம் ரூபா 25,000 ஆன போக்குவரத்து படிகளும், ரூபா 5,000 ஆன தொலைபேசி படிகளும் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், இந்த உத்தியோகத்தர் மீண்டும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். | சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரமின்றி இவ்வாறான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளல் மற்றும் படிகளை செலுத்துதல் சட்டத்திற்கு முரணானது ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1994 யூன் 14ஆந் திகதிய 95ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கம்பனியின் உத்தியோகத்தர்களுக்காக சம்பளத்திற்கு மேலதிகமாக விசேட படிகள், களியாட்ட படிகள், தற்காலிக படிகள், உள்ளக படிகள் மற்றும் பதிற்கடமைப் படிகளாக ரூபா 331,980 கூட்டுத்தொகையான அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அந்த படிகள் 2012ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முன்பிருந்து ஊழியர்களுக்கு செலுத்திய படிகள் ஆகும். கீழ் குறிப்பிடப்பட்ட படிகள் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிக்கும் போது இரத்துச் செய்யுமாறு அல்லது இடைநிறுத்துமாறு அறிவிக்கப்படவில்லை. அவ்வாறே, ஏதேனுமொரு உத்தியோகத்தருக்கு வரப்பிரசாதமாக செலுத்தப்பட்ட ஏதேனும் படிகள் காணப்படுமாயின் அதனை பின்னர் நீக்காதிருத்தல் பொதுவான நடைமுறை ஆகும். அவ்வாறே, அந்த கொடுப்பனவுகள் துறையுடன் தொடர்புடைய படிகளாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் சட்டத்திற்கு இணங்காதவையாக கருதி செயற்படல் வேண்டும். |
| (ஈ) | 2006 ஏப்ரல் 10ஆந் திகதி 28 ஆம் இலக்க மற்றும் 2006 ஆகஸ்ட் 01ஆந் திகதிய 28(ii)ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாது, மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்படாத ஆறு பதவிகளுக்காக ஏழு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக ரூபா 4,464,380 மேலதிக சம்பளக் கிரயமொன்று கம்பனிக்கு நேர்ந்திருந்தது. | கம்பனியின் செயற்பாடுகள் பரவலடைந்தமையின் காரணத்தால், நிலவும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில நிலவும் பதவிகள் போதுமானதாக இல்லாதிருந்தமையின் காரணத்தால், நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது மிகவும் சிரமமான பணியொன்றாக காணப்படுகின்றமையால், ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இவற்றுள் 04 ஊழியர்களின் ஒப்பந்தம் நிறைவடைந்துள்ளது. எவ்வாறான போதிலும், சேவைத் தேவைப்பாட்டிற்கமைய தேவையான தகவல்களை பேணுவதற்கும், அந்த பதவிகளை எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்படக்கூடாது. |

**2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் தலைவரின் பயன்பாட்டிற்காக 2018 சனவரி மாதம் முதல் 2019 மே மாதம் வரையிலும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தரப்பினரிடமிருந்து வாடகை அடிப்படையில் ஆறு வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 2,601,726 கூட்டுத்தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2006 சனவரி 25ஆந் திகதிய 8ஆம் இலக்க தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4ஆம் பிரிவின் பிரகாரம், கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டிராததுடன், வாடகை பண எல்லையினை நிர்ணயிக்கும் போது பொது திறைசேரியின் சுற்றறிக்கைகள் அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தலைவருக்காக வாகனங்களை வாடகைக்கு எடுக்கும் போது தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் மீறப்படாத வகையில் செயற்பட வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டரீதியான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டிராததுடன், வாடகையை தீர்மானிக்கும் போது பொது திறைசேரியின் சுற்றறிக்கை அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தலைவருக்கான வாகனத்தை வாடகைக்கு பெறும் போது தலைவரின் விருப்பத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | அந்த வாகனத்திற்காக மாதாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் பேணப்பட்டிராமையால், குறித்த காலப்பகுதியினுள் குறிப்பிட்ட வாகனத்திற்காக | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டிராததுடன், வாடகையை தீர்மானிக்கும் போது பொது திறைசேரியின் சுற்றறிக்கை அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தலைவருக்கான வாகனத்தை வாடகைக்கு பெறும் போது தலைவரின் விருப்பத்திற்கிணங்க | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், நி.பி. 1645 இன் பிரகாரம் ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் தயாரிக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட ரூபா 993,022 எரிபொருள் செலவினத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | ஒட்டுமொத்த வாடகை வாகனங்களின் சராசரி ஓட்டக் கிரயம் கிலோ மீற்றருக்கு ரூபா 133 எனும் சந்தை விலைகளை விஞ்சிய பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | வாகனத்தின கிலோ மீற்றரொன்றிற்கான கிரயத்தினை கணிப்பிடும் போது, வாடகையின் பெறுமதி, சாரதியின் சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மிகவும் உயர்வான பெறுமதியொன்று கிடைக்கும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை பின்பற்றி கம்பனிக்கு சாதகமான குறைந்த கிரயத்தின் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களின் ஈடுபட வேண்டும். |
| (v) | இந்த வாடகை வாகனங்களுக்காக செலுத்த வேண்டிய வாடகைப் பணத்திற்காக ஒவ்வொரு மாதத்திலும் வாகனத்தின் உரிமையாளர்களின் பெயரில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 937,401 பெறுமதியான காசோலைகளுக்காக தலைவர், நிதி முகாமையாளர், மனிதவள முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஒருவரினால் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த காசோலைகள் பெறுநர் தவிர்ந்த வேறு யாராலும் மாற்றும் வகையில் “பெறுநர் கணக்கிற்கு மாத்திரம்” எனும் அடிக்கோடு நிதி முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப முகாமையாளர், பொது முகாமையாளர் மற்றும் தலைவரின் பரிந்துரைக்கமைய இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன், வங்கியினால் அதன் பிரகாரம் | வாகன வாடகையாளர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது, வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வாடகை வழங்குநருக்கு குறித்த வாடகைத் தொகையை குறிப்பிட்டு நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உரிய காசோலைகளை வழங்குதல் பொதுவான நடைமுறையாகும். எவ்வாறான போதிலும், பெரும்பாலான சந்ர்ப்பங்களில் தலைவரின் கட்டளைக்கமைய எவராலும் காசாக்கக்கூடிய வகையில் காசோலையின் அடிக்கோடிடல் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அவ்வாறு செயற்படல் தவறான போதிலும், நிறுவனத் தலைவரின் கட்டளைக்கமைய செயற்பட கீழுள்ள உத்தியோகத்தர்கள் கடப்பட்டுள்ளமையால் கீழ்க்குறிப்பிட்டவாறு இடம்பெற்றுள்ளது. குறித்த நடைமுறை தலைவரின் கட்டளைக்கமைய இடம்பெற்றுள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | கம்பனியின் தலைவர் உள்ளடங்கலாக உயர் முகாமைத்துவம் கூட்டாக செயற்பட்டு கம்பனியின் நிதியை தவறான முறையில் பயன்படுத்தியுள்ளமை யால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பட்டு அடிக்கோடுகள் இரத்துச்செய்யப்பட்டிருந்த துடன், அதன் பின்னர் அந்த காசேலையை கொண்டு வருபவருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக காசோலைகள் தொடர்பில் நி.பி. 187(4) மற்றும் 384(2) பந்திகளின் பிரகாரம் கம்பனியின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்படுவதுடன், அந்த காசோலைகளை மாற்றிய உத்தியோகத்தர்கள் குறித்த பணத்தை தலைவருக்கு வழங்கியதாக கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகளை வழங்கியுள்ளனர். | | |
| (vi) | நிதி மற்றும் வெகுசன ஊடகத்தின் செயலாளரின் 2019 சனவரி 30ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தலைவர் அத்திகதிக்கு முன்னர், அதாவது, 2018 திசெம்பர் 17 முதல் 2019 சனவரி 29ஆந் திகதி வரையிலும் நியமனமொன்றில்லாது கம்பனியின் தலைவராக கடமையாற்றி கம்பனியின் தோட்ட அதிகாரியொருவருக்கு சொந்தமான 32 ஸ்ரீ 4764 எனும் இலக்கமுடைய வாகனத்தினை தனது பயன்பாட்டிற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்தார். மேலும், அந்த வாகனத்திற்காக குறித்த காலப்பகுதியினுள் வாடகையாக ரூபா 250,161 மற்றும் 615 லீட்டர் எரிபொருளுக்காக | தலைவர் முதலாவதாக 2018.08.09ஆந் திகதி நியமனம் பெற்று வந்துள்ளதுடன், 2018 ஒக்தோபர் மாதம் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் அடிப்படையில் நியமனம் இழக்கப்பட்டு, 2018.12.19ஆந் திகதி மீள நிறுவனத்தின் கடமைகளை பொறுப்பேற்றார். இரண்டாவது தடைவ கடமையை பொறுப்பேற்கும் போது அதற்குரிய நியமனக் கடிதம் 2019.01.29ஆந் திகதி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது. எவ்வாறான போதிலும், தலைவர் இரண்டாவது தடைவ நிறுவனத்தில் கடமைகளை பொறுப்பேற்ற திகதி முதல் குறித்த வாடகை வாகனம் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திட்டு வாடகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் போது தலைவராக கடமையாற்றுமாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் தனக்கு அறிவுரை வழங்கப்பட்டதாகவும், அதன் பிரகாரம், பதவிக்குரிய கடமைகள் 2018.12.18ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு | நிதி முறையற்ற வித்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகின்றமையால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 60,150 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செலவினங்கள் அதிகாரமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்படுகின்றது. மேலும், குறித்த வாடகையினை குறித்த தோட்ட அதிகாரி பெற்றுக்கொள்ளவில்லை என கணக்காய்விற்கு எழுத்துமூலம் சாற்றுபடுத்தியிருந்தார். | நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வாடகைப் பணம் தலைவரால் பயன்படுத்தப்பட்ட வாடகை வாகனத்தின் உரிமையாளரான தோட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டதா என்பது தொடர்பான தகவல்கள் இல்லாதிருப்பதுடன், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | சந்தைப்படுத்தல் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது அந்த பதவிக்கு உரித்தற்ற படிகளான ஊழியர் படிகள் இரண்டிற்குரிய ரூபா 618,085 செலுத்தப்பட்டிருந்தது. | சந்தைப்படுத்தல் முகாமையாளராக சேவையாற்றிய உத்தியோகத்தர் நிரந்தர தோட்ட உத்தியோகத்தர் ஒருவராவதுடன், சேவைப் பிரதியீடொன்றாக சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார். நியமனக் கடிதங்கள் மற்றும் தோட்டத்தின் அதிகாரியொருவருக்கு உரித்தான ஊழியர் படிகள் மற்றும் ஏனைய படிகள் / வரப்பிரசாதங்கள் அவருக்கு வழங்கப்படுவதற்கான காரணம், இங்கு புதிய நியமனமொன்றை வழங்குவதற்கு பதிலாக தற்போதைய ஊழியர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கிரயக் கட்டுப்பாடு ஏற்படுத்தும் முகாமைத்துவத்தின் நோக்கம் ஆகும். | பதவிக்கு உரித்தற்ற சம்பளம் மற்றும் படிகள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (இ) | உடன்படிக்கை கைச்சாத்திடாது 2014ஆம் ஆண்டு டயலொக் எக்ஸியாட்டா கம்பனிக்கு தொலைத்தொடர்பு கோபுரமொன்றினை நிர்மாணிப்பதற்காக கம்பனிக்குரிய பன்சல்தென்ன தோட்டத்தின் காணியொன்று குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஹபுகஸ்பிட்டிய மற்றும் ஹுனுகல மொபிடல் தொலைத்தொடர்பு கோபுரங்கள் இரண்டிற்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. கோபுரங்களுக்கான பணம் செலுத்தலும் உரிய முறையில் இடம்பெறுகின்றது. ரத்வத்த பன்சல்தென்னையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள டயலொக் எக்ஸியாட்டா கம்பனியின் கோபுரங்களுக்காகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், அமைச்சின் காணிகள் குழுவின் அங்கீகாரம் ஆகியன கிடைத்துள்ளன. எனினும், உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. பின்னர் உடன்படிக்கையொன்றினை | துரிதமாக உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கைச்சாத்திடுவதற்கான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. கோபுரத்தினை நிர்மாணித்த நாளிலிருந்து இதுவரையிலுமான அனைத்து கொடுப்பனவுகளும் உரிய முறையில் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மில்லவான தோட்டத்தில் 1000 இறப்பர் மரங்களை விலைக்கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யும் போது விசேடமான காரணங்கள் எதுவுமின்றி, கூடிய விலைக்கேள்வியாளருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிராததுடடன், அதனைவிட குறைவான விலைக்கேள்வியாளர்களுக்கு கேள்வி கையளிக்கப்பட்டமையால் கம்பனிக்கு ரூபா 539,688 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. இதன்போது அதிக விலைக்கேள்வியை முன்வைத்தவர் கொள்வனவு செய்ய மறுதலித்த காரணத்தால், இரண்டாவது அதிக விலைக்கேள்வியாளருக்கு கேள்வி கையளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும், அதனை சான்றுபடுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் எவையும் முன்வைக்கப்படவில்லை. | **EPL/PL/TB/T-08/2019** ஆம் இலக்க பிராந்திய விலைக்கேள்வி 2019.10.21ஆந் திகதி திறக்கப்பட்டுள்ளது. அதன் போது அதிக விலைக்கேள்வியை முன்வைத்தவர் கொள்வனவு செய்ய மறுத்த காரணத்தால் இரண்டாவது அதிக விலைக்கேள்வியாளருக்கு கேள்வியை கையளிப்பதற்கு பெறுகைகள் சபை தீர்மானித்துள்ளது. இதன் போது இரண்டாவது விலைக்கேள்வியாளரால் முன்வைக்கப்பட்ட விலைக்கேள்வியானது மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக காணப்பட்டமையால் அவருக்கு கேள்வி கையளிக்கப்பட்டது. | கம்பனிக்கு அதிக நலன் ஏற்படும் வகையில் கேள்வி கையளிக்கப்பட வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தமான ரத்வத்த தேயிலைச் தொழிற்சாலை 2008ஆம் ஆண்டு முதல் தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2013ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய | இந்த தொழிற்சாலை குத்தகைக்கு வழங்கப்பட்ட நாள் தொடக்கம், குத்தகை பெறுநரால் பல்வேறு விதமாக நவீனமயப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், 2015ஆம் ஆண்டின் போது உற்பத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும், குத்தகை தொகையை செலுத்துவதை புறக்கணித்த காரணத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அழைப்பாணை | நிலுவைக் குத்தகை தொகை துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

ரூபா 7,468,900 நிலுவை குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அனுப்பப்பட்டுள்ளதுடன், உடன்படிக்கையின் முதல் பத்து ஆண்டுகள் கடந்த பின்னர் உடனடியாக அமுலாகும் வகையில உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே, குத்தகையாளரால் பொருத்தப்பட்ட உபகரணங்களுடன் புதுப்பிக்கப்பட்ட தொழிற்சாலையை எலகடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், இது தொடர்பில் சட்டரீதியான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிரந்தர பதவியொன்றில் ஏற்படும் வெற்றிடத்திற்காக நிரந்தர அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் வரையில், அதற்காக அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டும் எனினும், அவசர தேவை காரணமாக அமைய அடிப்படையில் நியமனமொன்று வழங்கப்பட்டால், அதற்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடியளவு விரைவாக அந்த பதவியை 03 மாதங்களினுள் நிரப்புவதங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2019 சனவரி 15ஆந் திகதி முதல் தகைமைகளை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் மனிதவள முகாமையாளர் பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்டு கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | கம்பனியில் வெற்றிடமாக காணப்பட்ட மனிதவள முகாமையாளர் பதவிக்காக 2018ஆம் ஆண்டின் போது பத்திரிகை அறிவித்தலொன்றை மேற்கொண்டு, நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன்போது உரிய தகைமைகள் மற்றும் அனுபவமுடைய உத்தியோகத்தரொருவர் இல்லாதிருந்தமையால், குறித்த பதவிக்காக நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். அவ்வாறே, நிலவும் சம்பள படிமுறைகளுக்கு இமைவாக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் சேவையாற்ற இணங்காததுடன், கம்பனியின் நீதிமன்ற நடவடிக்கைகயில் முன்னிலையாவதற்கும் மறுத்திருந்தனர். மேற்படி ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர், கம்பனியின் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் முன்னிலையாவதற்கும், அதற்காக பிணையாவதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தார். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகளுக்கமைய நிலவும், ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய நிலவும் சம்பள படிமுறைகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் விண்ணப்பிக்காத காரணத்தால், தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்று, 2021 யூன் 30ஆந் திகதிக்கு முன்னர் அந்த பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். | நிரந்தர பதவியை மூன்று மாதங்களினுள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் கைவிரலடையாள இயந்திரம் உரிய முறையில் பராமரிக்கப்பட்டிராததுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் | இந்த விரலடையாள இயந்திரம் பரீட்சார்த்தத்திற்காகவே காணப்பட்டது. அதில நிலவிய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும், அதனோடு இணைந்ததாக வருகைப் பதிவேடும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருகைப் பதிவேடு மாத்திரம் பேணிச்செல்லப்பட்டிருந்தது. | தற்போது COPE குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2021 சனவரி மாதம் முதல் தலைமை அலுவலகம் மாத்தளை பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த இயந்திரம் இரண்டு வாரங்கள், அதாவது மே மாதம் 15ஆந் திகதிக்கு முன்னர் மாத்தளையில் தலைமை அலுவலகத்தில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | 2006ஆம் ஆண்டின் போது செலகம தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது, ஐந்து வருடங்களுக்கு ஒரு தடைவ குத்தகை வீதத்தினை மாற்றியமைப்பதற்குரிய பிரிவுகள் குத்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமையால், 2006ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், கம்பனிக்கு ரூபா 1,430,542 கூட்டுத்தொகையான வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | செலகம தேயிலைதத் தொழிற்சாலையின் குத்தகை வாடகையை தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்து, உடன்படிக்கையினை நாளதுவரையாக்குவதற்கும், நிலுவைக் குத்தகை வாடகை காணப்படுமாயின் மீள அறவிடுவதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை உடன்படிக்கைக்கு திருத்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்குவதற்கும், நிலுவை குத்தகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் மீளாய்வாண்டின் போது **U709** மற்றும் **STOM** ஆகிய உர வகைகளில் முறையே 203,561 கிலோ கிராம்கள் மற்றும் 56,732 கிலோ கிராம்கள் இடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றில் முறையே 136,386 கிலோ கிராம் மற்றும் 53,895 கிலோ கிராம்கள், அதாவது முறையே 67 சதவீதம் மற்றும் 95 சதவீதம் அளவான உரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதாவது மதிப்பிடப்பட்ட உரத்திற்கான செலவினத்தில் ரூபா 9,387,776 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயிர்ச்செய்கைக்காக உரமிடுதல் உரிய நியமத்திற்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அந்த அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த தேவையான தொழிற்படு மூலதனம் இல்லாதிருந்த காரணத்தால் உரமிடுதல் போன்ற விவசாயப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. கம்பனியில் நிலவும் மாதாந்த தொழிற்படு மூலதனப் பற்றாக்குறை ரூபா 8-10 மில்லியனுக்கு இடைப்பட்ட பெறுமதியினை கொண்டுள்ளது. | திட்டமிடப்பட்ட உரத்தின் அளவானது பயிர்களுக்கு இடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2018ஆம் ஆண்டிற்கான தரவுகளுக்கமைய இலங்கையின் ஒரு ஹெக்டேயருக்கான நியமத்திற்கமைவான இறுதி தேயிலை விளைச்சல் 1,595 கிலோ கிராம்கள் ஆகும். எனினும், கம்பனியால் நிர்வகிக்கப்படும் ஆறு தோட்டங்களின் மீளாய்வாண்டிற்கான தேயிலை விளைச்சல் 501 முதல் 1027 கிலோ கிராம்களுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. மேலும், கம்பனியால் நிர்வகிக்கப்படும் ஆறு தோட்டங்களின் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட தேயிலை முடிவுப்பொருள் உற்பத்தி 759,577 கிலோ கிராம்களாக காணப்படுவதுடன், உள்ளபடியான உற்பத்தி 518,961 கிலோ கிராம்களாக காணப்பட்டதுடன், அடையப்பட்ட இலக்கானது 68 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | கம்பனிக்கு சொந்தமாக காணப்படும் தேயிலைத் தோட்டங்களின் 55% சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமானது பயன்படு ஆயுட்காலத்தை விஞ்சியுள்ள பயிர்கள் ஆகும். அந்த பயிர்களிலிருந்து துறையின நியமத்திற்கு அமைவான விளைச்சலைப் பெற்றுக்கொள்வது கடினமானது ஆகும். பயிர்செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் காணப்படும் எதிர்பாராத காலநிலை சீர்கேடுகளும் இவ்வாறு விளைச்சல் குறைவடைந்தமைக்கு காரணமாகியுள்ளது. எவ்வாறான போதிலும், தற்போது மிகவும் விளைச்சலை தரக்கூடிய தேயிலைக் களங்கள் இனங்காணப்பட்டு பசளையிடுதல், ஏனைய விவசாய பணிகள் முன்னெடுக்கப்படல் மற்றும் ஆக்கபூர்வமான களங்கள் இனங்காணப்பட்டு அவற்றை பழைய நிலைக்கு மீட்டெடுப்பதற்கு எரிய நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. | நியமத்திற்கமைவான மதிப்பிடப்பட்ட விளைச்சல் இலக்குகளை அடைய வேண்டும். |
| (இ) | ஹெக்டேயர் ஒன்றுக்கான வருடாந்த தேயிலை விளைச்சல் 550 கிலோ கிராமுக்கு குறைவான விளைச்சலுடைய சுமார் 379 ஹெக்டேயர்கள் வெளிவாரி பயிர்செய்கையாளர்களான ஓய்வூதியம் பெற்றோருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பெருந்தொட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளுக்கமைய அந்த நிலப்பிரதேசத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த நியமத்திற்கமைவான தேயிலை விளைச்சல் 604,856 கிலோ கிராம்களாக காணப்பட்ட போதிலும், அவர்களால் வழங்கப்பட்ட தேயிலை விளைச்சலானது 50,495 கிலோ கிராம் தேயிலை மாத்திரமே ஆகும். | பராமரிப்புக் கிரயம் அதிகரித்தமை, விளைச்சல் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் வெளிவாரி பயிர்ச்செய்கையாளர்கள் வீழ்ச்சியடைந்துள்ளனர். இந்த தோட்டங்கள் கம்பனியால் நிர்வகிக்கப்படுமாயின் அதிக கிரயத்தினை மேற்கொள்ள நேரிடும். ஆனபோதிலும், அங்கீகரிக்கப்பட்ட விவசாய பணிகளை மேற்கொண்டு வெளிவாரி பயிர்ச்செய்கையாளர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. | வெளிவாரி பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக விளைச்சலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் 2018/19ஆம் ஆண்டிற்குரியதாக வெளியிடப்பட்ட தரவுகளுக்கமைய, இலங்கையின் இறப்பர் கிலோவொன்றிற்கான சராசரி | கம்பனிக்கு சொந்தமான இறப்பர் துறையின் 65% இற்கு மேற்பட்ட சதவீதமானது அதன் பொருளாதார ஆயுட்காலம் கடந்துள்ள பயிர்கள் ஆகும். | துறையில் நிலவும் அலகுக் கிரயம் மற்றும் விற்பனை விலை ஆகியவற்றை |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திக் கிரயம் ரூபா 297 ஆக இருந்த போதிலும், கம்பனியின் கிரயமானது ரூபா 352 இற்கும் ரூபா 734 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இறப்பர் பாலின் சராசரி விற்பனை விலையானது ரூபா 257 ஆக காணப்பட்ட போதிலும், கம்பனியில் அந்த விலையானது ரூபா 232 இற்கும் ரூபா 248 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன், உற்பத்திக் கிரயம் மற்றும் சராசரி விற்பனை விலை ஆகியவற்றை துறையில் நிலவும் பொதுவான நிலைமைகளுக்கமைய பேண கம்பனி தவறியிருந்தது. | இதன் காரணமாக இறப்பர் உற்பத்திக் கிரயம் உயர்வான பெறுமதியினை கொண்டிருத்தல் மற்றும் விளைச்சல் குறைவான அளவில் காணப்பட்டுகின்றமை ஆகியவை இடம்பெற்றுள்ளன. அதனை திருத்துவதற்காக புதிய பயிர்களை நடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | பேணுவதன் மூலம் துறையில் நிலைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமங்களுக்கமைய தென்னை மரமொன்றின் வருடாந்த சராசரி விளைச்சல் சுமார் 72 காய்களாக காணப்பட்ட போதிலும், கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்ற சுமார் 267 ஹெக்டேயர்கள் பரப்பளவான மூன்று தென்னந் தோட்டங்களின் சராசரி விளைச்சல் 35 காய்களாக காணப்பட்டதுடன், இது பொதுவான சராசரியின் ஐம்பது சதவீத்திற்கும் குறைவான பெறுமதி ஆகும். மேலும் துறையின் பொதுவான நியமத்தின் பிராகரம், ஹெக்டேயரொன்றில் காணப்பட வேண்டிய தென்னை மரங்களின் எண்ணிக்கை 158 ஆக காணப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் தோட்டங்களில் அந்த எண்ணிக்கையானது 31 இற்றும் 129 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இதன் காரணமாக நியமத்திற்கமைவாக ஹெக்டேயரொன்றில் கபணப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கையை விட 10,347 மரங்கள் குறைவாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தென்னை பயிர்ச்செய்கை நிலமானது இருபத்தைந்து சதவீதத்தினால் குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளமையை காண்பிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் பெரும்பாலான தென்னை பயர்ச்செய்கைகள் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிலவும் தொழிற்படு மூலதனப் பற்றாக்குறை காரணமாக உள்ளீடுகள் (உரம் மற்றும் ஏனைய இரசாயன பொருட்கள்) உரிய முறையில் இடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தெங்கு பயிரிச்செய்கையின் எதிர்பார்த்த விளைச்சலை அடைவதற்கு கம்பனி தவறியுள்ளது. அதன் பிரகாரம், ஹெக்டேயரொன்றில் காணப்பட வேண்டிய தென்னை மரங்களின் எண்ணிக்கை காணப்படாமை மற்றும் தென்னை மரமொன்றிலிருந்து எதிர்பார்த்த விளைச்சல் பெறப்படுவதில்லை. புதிய பயிர்களுக்காக விவசாய உள்ளீடுகளை வழங்குதல், குறைவான பயன்படுத்தப்பட்ட துறைகள் இனங்காணப்பட்டு அதற்காக விவசாய உள்ளீட்டுகள் வழங்குவதற்கு இதுவரை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நியமங்களுக்கமைய ஹெக்டேயர் ஒன்றுக்கான தென்னை மரங்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த காய்களின் விளைச்சல் பேணுவதற்கு தென்னை தோட்ட பயிர்ச்செய்கை முகாமை செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது மூன்று தோட்டங்களிலிருந்து ரூபா 7,080,000 ஆன கொக்கோவா விற்பனை வருமானம் மற்றும் நான்கு தோட்டங்களின் ரூபா 9,275,000 | கொக்கோவா மற்றும் மிளகு காலப் பயிர்கள் ஆகும். காலநிலை மாற்றமடைதல், விவசாய உள்ளீடுகள் உரிய முறையில் வழங்கப்படாமை | மதிப்பிடப்பட்ட வருமான இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| தொகையான மிளகு விற்பனை வருமானத்தையும் கம்பனி எதிர்பார்த்த போதிலும், பெற்றுக்கொண்ட உள்ளபடியான வருமானம் முறையே ரூபா 240,000 மற்றும் ரூபா 648,994 ஆக காணப்பட்டமையால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமானது ரூபா முறையே மூன்று சதவீதம் மற்றும் ஏழு சதவீதமாக காணப்பட்டது. | போன்ற காரணங்களால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாதிருந்தது. விவசாய உள்ளீடுகள் உரிய முறையில் இடுவதற்காக போதியளவான தொழில்படு மூலதனம் இல்லாதிருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | வேண்டும். |

## 2.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) உற்பத்தி பணிகளை மேற்கொள்ளக்கூடிய நிலையிலுள்ள ரத்வத்த தேயிலைத் தொழிற்சாலை மீளாய்வாண்டின் யூலை மாதம் முதல் கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரத்வத்த தேயிலைத் தொழிற்சாலையில் காணப்பட்ட குத்தகை உடன்படிக்கை தொடர்பில் தற்போது சட்டரீதியான பணிகள் இடம்பெறும் காரணத்தால், உற்பத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அது தொடர்பில் உள்ள சட்டரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டவுடன் உற்பத்தி நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதற்குரிய பணிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. | செயற்பாட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |